Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)

National Environment Agency
Safeguard • Nurture • Cherish

# சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் கல்லறைகள் தோண்டியெடுப்புப் பற்றிய அறிவிப்பு (கட்டம் 8)

**10, 11, 12, 13, 14, 15, 16, 18, 21 & 22 புளோக்குகளில் அமைந்துள்ள கல்லறைகள் பாதிக்கப்படுகின்றன**

வருங்காலச் சவ அடக்கங்களுக்குப் போதிய நிலம் இருப்பதை உறுதிப்படுத்த, தேசிய சுற்றுப்புற அமைப்பு சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் கல்லறைகளைத் தோண்டியெடுக்கும் திட்டப்பணியை மேற்கொண்டுள்ளது. புளோக்குகள் 6, 7, 8, 9, 19, 20 ஆகியவற்றில் தோண்டியெடுக்கும் பணி 2021ல் பூர்த்தியடைந்தது.

புளோக்குகள் 10, 11, 12, 13, 14, 15, 16, 18, 21, 22 ஆகியவற்றிலுள்ள முஸ்லிம் கல்லறைகள், பதிவு முடிவடையும் தேதிக்குப் பிறகு தோண்டியெடுக்கப்படும். பிரேதச்சிதைவுகள் சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் மறுஅடக்கம் செய்யப்படும். திட்டப்பணியின் 8-ம் கட்டத்திற்கான பதிவு, தோண்டியெடுப்பு, மறுஅடக்க சேவைகளை மேற்கொள்ள சிங்கப்பூர் இஸ்லாமியச் சமய மன்றத்தை (முயிஸ்) தேசிய சுற்றுப்புற அமைப்பு நியமித்துள்ளது.

**முதன்மைக் கல்லறைகள்**

இடுகாட்டின் இந்தப் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் தங்கள் உறவினரின் (**"காலமான முதன்மை உறவினர்"** என்றழைக்கப்படுவர்) பிரேதச்சிதைவுகளைக் கோருமாறு குடும்ப உறுப்பினர்கள் அழைக்கப்படுகின்றனர். கோரிக்கைக் காலம் **13 செப்டம்பர் 2021 முதல் தொடங்கி ஓராண்டு காலத்தில் முடிவடையும்.** தோண்டியெடுத்து மறுஅடக்கம் செய்யும் செலவுகளை அரசாங்கம் ஏற்கும்.

**துணைக் கல்லறைகள்**

சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் புளோக்குகள் 10, 11, 12, 13, 14, 15, 16, 18, 21, 22 ஆகியவற்றுக்கு வெளியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள காலமான முதன்மை உறவினரின் மற்ற குடும்ப உறுப்பினர்களின் (**"காலமான துணை உறவினர்"** என்றழைக்கப்படுவர்) பிரேதச்சிதைவுகளையும் குடும்ப உறுப்பினர்கள் கோரலாம். இதன்வழி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிரேதச்சிதைவுகள் அதே அல்லது பக்கத்துக் கல்லறையில் மறுஅடக்கம் செய்யப்படலாம். காலமான இந்தக் குடும்ப உறுப்பினர்கள், பதிவு முடிவடையும் தேதிக்கு முன்பாகக் **குறைந்தது** 15 ஆண்டுகாலம் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இப்பிரிவைச் சேர்ந்த காலமானவர்கள், காலமான முதன்மை உறவினரின் பின்வரும் உறவினர்களாக இருக்கவேண்டும்:




- துணைக் கல்லறைகள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு பிரேதச்சிதைவுக்கும் **$80 கட்டணம்** (பொருள், சேவை வரிக்குமுன்) **விதிக்கப்படும். இந்தக் கட்டணம் திருப்பித்தரப்படாது.**
- தோண்டியெடுப்புக்குக் குடும்ப உறுப்பினர் எவரேனும் எழுத்து மூலமாக முயிஸிடம் மறுப்புத் தெரிவித்தால் துணைக் கல்லறைகளுக்கான கோரிக்கை மேற்கொள்ளப்படாது.

**<u>கட்டம் 8-ன்கீழ்ப் பாதிக்கப்படும் கல்லறைகள்</u>**

## சுவா சூ காங் இடுகாடு




## கல்லறையைக் கோருவது எப்படி

### கல்லறைகளின் பதிவும் சரிபார்ப்பும்

1. குடும்ப உறுப்பினர்கள் **13 செப்டம்பர் 2021 திங்கள், காலை 9 மணியிலிருந்து, சிங்பாஸ் பயன்படுத்தி www.pusara.sg இணையத்தளம் வாயிலாகத் தங்களது உறவினரின் பிரேதச்சிதைவுகளைக் கோரலாம்.**
2. கொவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகள் நடப்பில் இருப்பதால், **இணையம்வழி பதிவு செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிறது.** இணையம்வழி பதிவு செய்ய இயலாதவர்கள், 7 முஸ்லிம் இடுகாடு பாதை 3, சிங்கப்பூர் 718733 எனும் முகவரியில் (புசாரா அமன் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்) அமைந்திருக்கும் முஸ்லிம் இடுகாடு தோண்டியெடுப்பு அலுவலகத்திற்கு (MCEO) நேரில் வருகையளிக்க, **www.pusara.sg** இணையத்தளம் வாயிலாகத் தேதிக் குறிக்கலாம்.
3. இணையம்வழி பதிவின் ஒரு பகுதியாக இணையத்தளத்தில் பதிவேற்றப்படும் அடையாளம்காணும் புகைப்படங்களைக் கொண்டு கல்லறைகள் சரிபார்க்கப்படும். தேவைப்பட்டால், MCEO அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று சரிபார்ப்பதற்கும் தேதிக் குறிக்கலாம்.
4. **இணையம்வழி அல்லது 6238 4504 எனும் தொலைபேசி எண் வழி தேதிக் குறித்த** குடும்பங்கள் மட்டுமே MCEO அலுவலகத்திற்கு வருகை அளிக்கலாம்.
5. காலமான முதன்மை உறவினருடன் சேர்த்துத் துணைக் கல்லறைகளையும் (பாதிக்கப்படாத கல்லறைகள்) கோருபவர்கள், பத்திரங்களை நேரடியாகச் சரிபார்ப்பதற்கும் **கட்டணம்** செலுத்துவதற்கும் MCEO அலுவலகத்திற்கு நேரில் வருகை தர தேதிக் குறிக்கவேண்டும். **www.pusara.sg** இணையத்தளத்தில் தேதிக் குறிக்கலாம்.
6. பதிவு செய்தவுடன், அதனை உறுதிப்படுத்தும் மின்னஞ்சல், குறுந்தகவல் ஆகியனவும் மேற்கொண்டு செய்யவேண்டியவை பற்றிய விவரங்களும் கல்லறையைக் கோருபவருக்கு அனுப்பி வைக்கப்படும்.
7. பதிவு செய்வதற்கான இறுதி நாள் **12 செப்டம்பர் 2022**.
8. முஸ்லிம் இடுகாடு தோண்டியெடுப்பு அலுவலகம் **சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் மூடப்பட்டிருக்கும்.**

## தோண்டியெடுப்பும் மறுஅடக்கமும்

1. தோண்டியெடுக்கும் தேதி நெருங்கும்போது, கல்லறையைக் கோரியவருக்கு மின்னஞ்சல், குறுந்தகவல் ஆகியன மூலம் தகவல் அளிக்கப்படும். தோண்டியெடுப்பையும் மறுஅடக்கத்தையும் நேரில் பார்வையிடுவது நல்லது. கல்லறையைக் கோருபவரால் அவ்வாறு செய்ய இயலாவிட்டால், தோண்டியெடுப்புத் தேதிக்குக் **குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பாக** 6238 4504 எனும் தொலைபேசி எண்வழி அல்லது info@pusara.sg மின்னஞ்சல் முகவரிவழி முயிஸிடம் தெரியப்படுத்த வேண்டும். முகவரியில் அல்லது தொடர்பு எண்ணில் ஏதேனும் மாற்றம் இருந்தால், முயிஸிடம் எழுத்துபூர்வமாகத் தெரியப்படுத்த வேண்டும்.
2. பிரேதச்சிதைவுகளை (இருந்தால்) மீட்க ஆரம்பநிலை மண் (லியாங் லஹாட்) எட்டப்படும் வரை கல்லறைகள் தோண்டப்படும். அதன்பிறகு பிரேதச்சிதைவுகள் வெள்ளைத் துணியில் தனித்தனியே போர்த்தப்பட்டு மறுஅடக்கம் செய்யப்படும்.
3. நீங்கள் கேட்டுக்கொள்ளாவிட்டால், தோண்டியெடுப்புப் பணிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகக் கல்லறைக்கற்கள் (இருந்தால்) வீசப்பட்டுவிடும்.
4. தோண்டியெடுக்கப்படும் பிரேதச்சிதைவுகளுக்குச் சிறப்புப் பிரார்த்தனை செய்யப்படவேண்டுமென சமய நிர்ப்பந்தங்கள் எதுவும் இல்லை என்பதால் சிறப்புப் பிரார்த்தனைகள் (தல்கின் போன்றவை) எதுவும் செய்யப்படாது.
5. தோண்டியெடுப்புப் பணி பூர்த்தியடைந்தவுடன் பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கத்திற்காக* சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்படும்.
6. கல்லறையைக் கோரியவர், பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்பட்ட இடத்தின் விவரங்கள் (புதிய **கல்லறை** புளோக் மற்றும் நிலப்பகுதி எண் உட்பட) கொண்ட பத்திரத்தை முயிஸிடமிருந்து பெறுவார்.
7. பிரேதச்சிதைவுகள் தேசிய சுற்றுப்புற அமைப்பின் வழிகாட்டிகளின்படி மறுஅடக்கம் செய்யப்படும்:
   - கோரப்படும் கல்லறைகளுக்கு ஒவ்வொரு நிலப்பகுதியிலும் 8 பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்படும்
   - கோரப்படாத கல்லறைகளுக்கு ஒவ்வொரு நிலப்பகுதியிலும் 16 பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்படும்

* கல்லறையைக் கோரியவரும் அவரது குடும்பத்தினரும் பிரேதச்சிதைவுகள் மறுஅடக்கம் செய்யப்படுவதைப் பார்வையிடலாம்.

## சிங்கப்பூருக்கு வெளியில் மறுஅடக்கம்

பிரேதச்சிதைவுகளைச் சிங்கப்பூருக்கு வெளியில் மறுஅடக்கம் செய்ய விரும்புவோர், சவப்பெட்டி ஏற்றுமதி அனுமதி பெற தேசிய சுற்றுப்புற அமைப்பின் பின்வரும் முகவரியில் விண்ணப்பிக்கலாம்:

Port Health Office
4545 Jalan Bukit Merah
Singapore 159466

விவரங்கள் கேட்டறிய, அன்புகூர்ந்து 6222 2585 எண்ணை அழைக்கவும்.

ஏற்றுமதிக்கான செலவுகளைக் கோரிக்கை செய்பவர் ஏற்கவேண்டும்.

## கோரப்படாத கல்லறைகள்

எவரும் கோராத கல்லறைகள், **"கோரப்படாத கல்லறைகளாக" வகைப்படுத்தப்படும்.**

**கோரப்படாத கல்லறைகளின் பிரேதச்சிதைவுகள் தோண்டியெடுக்கப்பட்டு,** சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் **மறுஅடக்கம் செய்யப்படும்.**

## எங்கே உதவி நாடுவது

மேல்விவரங்களுக்கு, **6238 4504** என்ற எண்ணில் எங்களை அழைக்கலாம் அல்லது **www.pusara.sg** இணையத்தளத்தை நாடலாம் அல்லது **info@pusara.sg** முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.